# உதயன்

சுடர் : 37 கதிர் : 335 | வியாழக்கிழமை 27 ஒக்ரோபர் 2022 | ஐப்பசி 10 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50



## கோப்பாயில் வழிப்பறி

யாழ்ப்பாணம், ஒக்.27
சைக்கிள் முன்கூடையில் இருந்த பணப் பை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் 11

### தமிழருக்கான தீர்வு விடயத்தில்

# ரணில் செயலாற்றினால் முழு ஆதரவு கிடைக்கும்!

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 27

புதிய அரசமைப்பினூடாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதே நிலைப்பாட்டில் இருப்பதை நாம் வரவேற்கின்றோம். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை செயற்படுத்தும் பணியில் இறங்கினால் நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம்.

11

## ஐக்கிய மக்கள் சக்தி அரசமைக்க தயார்!

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.27
மாற்று அரசாக ஐக்கிய மக்கள் சக்தி அரசை நிறுவ நாட்டு மக்கள் எந்நேரமும் தயாராகவே உள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
மருந்தக உரிமையாளர்கள் சங்கம், மருந்தக உதவியாளர் சங்கம், அவர்களின் தொழில் முயற்சியாளர் 11

## உயிர்ப் பலியெடுக்கும் டெங்குத் தொற்று

கொழும்பு, ஒக்.27
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 60 பேர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். சுமார் 62 ஆயிரம் பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள் மற்றும் 50 வயதுக்குக் குறைவானவர்கள்.
இந்த ஆண்டு இனங்காணப்பட்டுள்ள டெங்குத் தொற்றாளர்கள் எண்ணிக்கை கடந்த 11

## உடைமையில் ஹெரோய்ன் சந்தேகநபருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஒக்.27
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலணை, அம்பிகைநகரில் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது.
750 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்த நிலையில் தன் மீதான குற்றச் சாட்டை மறுத்தார். 11

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க இந்தியக் கடனின் கீழ் முயற்சி!

### பணிப்புரை விடுத்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.27
நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் துரித கண்காணிப்புக்களை 11

## மீளவும் அதிகரிக்கும் மின்சாரக் கட்டணம்!

யாழ்ப்பாணம், ஒக்.27
எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின் பாவனையாளர்களிடம் புதிய வரி ஒன்றை அறவிட இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.
சமூகப் பாதுகாப்பு ஒத்துழைப்பு வரியை அறவிட இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது என்று பொதுப் பயன் 11

## அமெ. துணைத் தூதுவர் டக் யாழில் பலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் துணைத் தூதுவர் டக் சோனெக் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தற்போதை நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், த.சித்தார்த்தன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரைச் சந்தித்து டக் சோனெக் கலந்துரையாடியுள்ளார்.
இந்தச் சந்திப்பில், தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமெரிக்கா, 11

## பரு. இ.போ.ச. சாலையில் கைகலப்பு: முகாமையாளர் உட்பட 11 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.27
பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 11 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
பருத்தித்துறை இ.போ.ச. சாலை முகாமையாளர் கொழும்பில் இருந்து நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அவரது நியமனம் தொடர்பில் சாலை ஊழியர்களிடையே முரண்பட்ட நிலைமையே காணப்படுகின்றது. முகாமையாளருக்குச் சார்பாக ஒரு தரப்பும், வேறொருவரை நியமிக்கவேண்டும் என்று இன்னொரு தரப்பும் செயற்படுவதாலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.
இந்தக் குழப்ப நிலைமையால் 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் இடைவிலகலை தடுப்பதற்கு இணைவோம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 27**

**அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்தே பாடசாலை இடைவிலகல்களை முற்றாகத் தடுத்து நிறுத்த முடியும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் சரா புவனேஸ்வரன் தெரிவித்தார்.**

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சங்கத்தின் நிர்வாகிகளுக்கான கூட்டத்தில் சில முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் வாழுகின்ற சிறுவர்கள் பெருமளவானோர் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர் என்ற தகவல் எங்களுக்குக் கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளில் இந்த இடைவிலகல்கள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் அதிகம்.

பெற்றோருக்குக் கட்டுப்படாத அல்லது சமூகத்துக்குக் கட்டுப்படாத வகையில் அவர்களுடைய நடத்தைகளில் நடத்தைப் பிறழ்வுகள் ஏற்பட்டிருப்பதை பலரும் சுட்டிக் காட்டுகின்றார்கள். பொருளாதார நெருக்கடி என்பது எமக்கு சவாலானது. அதே நேரம் பழக்கமானது. இன்று உயர் பதவிகளில் உள்ள பலர், அன்று பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து மீட்டவர்கள்தான்.

ஆதலால், இன்று இந்த நெருக்கடிகளில் இருந்து குழந்தைகளை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உள்ளது. புலமைத்துறையினர், ஆன்மிகச் செயற்பாட்டாளர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் என அனைவரும் ஓரணியில் நின்று எமது மாணவர்களுக்காகச் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் தான் கற்காத, படிப்பறிவற்ற சமூகமொன்று உருவாகுவதை நாம் தடுத்து நிறுத்த முடியும் - என்றார். (ம-125)

# கந்தசஷ்டி உற்சவம் நல்லூரில் ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 27

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு அதற்கான ஏற்பாடுகள் யாழ்.மாநகரசபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய உற்சவம் நிறைவடையும் நாளான எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், சூரன்போர் திருவிழாவான எதிர்வரும் 30 ஆம் திகதியன்று பிற்பகல் 12 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையிலும், 31 ஆம் திகதி மாலை 5 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும், நல்லூர் ஆலயச் சுற்றாடலில் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வாகனங்கள் உள் நுழைய முடியாதவாறு பாதைகள் மூடப்பட்டிருக்கும். உற்சவ நேரங்களில் மாத்திரம் வாகனங்கள் ஆலயச் சுற்றாடலைத் தவிர்த்து வழமையான மாற்றுப் பாதைகளூடாகப் பயணிக்கமுடியும் என்று மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (ஒ-14,27)


# சமுர்த்தி தலைவர்களுக்கு கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஒக். 27

யாழ்.மாவட்ட சமுர்த்தி சமுதாய மட்ட தலைவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கலந்துரையாடலில் சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் உட்பட உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதால் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி மகா சங்க பிரதேச மட்ட தலைவர்கள், மகா சங்க நிறைவேற்றுக் குழுத் தலைவர், பிரதேச மட்ட சமுதாய அடிப்படை அலகின் தலைவர் மற்றும் செயலாளர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

# ஐ.எம்.எப். ஒப்பந்த நிபந்தனை; மேலும் மின்கட்டண அதிகரிப்பு?



கொழும்பு, ஒக். 27

மின்சாரக் கட்டணத்தை மேலும் 30 வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு கிடைக்கவுள்ள நிதி தொடர்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அதற்கு முன்னர் இந்த மின்கட்டண அதிகரிப்பு அவசியம் என சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் மின்கட்டணத்தை மீள உயர்த்துவது தொடர்பில் இதுவரை அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை.

இதேவேளை கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கை மின்சார சபை பெருமளவில் மின்கட்டணத்தை அதிகரித்தது. இதன்மூலம் இலங்கை மின்சார சபைக்கு வருடாந்தம் ஆயிரத்து 500 கோடி ரூபா மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கத்தியால் தாக்கி இளைஞர் காயம்!

கிளிநொச்சி, ஒக். 27

கத்தியால் தாக்கியதில் இளைஞர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

முல்லையடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, இனந்தெரியாத நபர் ஒருவரால் கத்திவெட்டுக்கு இலக்காகியுள்ளார்.


பளை- முல்லையடியைச் சேர்ந்த பால்ராஜ் துஷாந்தன் என்பவரே இவ்வாறு கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார்.

கத்திவெட்டில் காயமடைந்த இளைஞர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மேலும் இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என பளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பளை பொலிஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை சரணடைந்துள்ளார் என்றும் தனிப்பட்ட தகராறு காரணமாகவே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,113)

# பயங்கரவாதத் தாக்குதல்களை தென்னிந்தியாவில் நடத்தச் சதி

கொழும்பு, ஒக். 27

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஈஸ்டர் தாக்குதல்களைப் போன்றதான பெரும் தாக்குதல்களை தென்னிந்தியாவில் நடத்தத் திட்டமிட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



கடந்த 16ஆம் திகதி இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம் கோயம்புத்தூரில் உள்ள மத வழிபாட்டுத் தலத்துக்கு அருகே காரில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இந்தக் குண்டுவெடிப்பு சந்தேகத்துக்குரிய சம்பவம் என்பதை அவதானித்த தமிழக பொலிஸார், குறித்த வெடிப்பு பயங்கரவாதச் செயலா? எனக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்தனர். இதன்போதே, 2019ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுக்கு நிகரான தாக்குதலை நடத்த சந்தேகநபர் திட்டமிட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கோனியம்மன் ஆலயத்தில் இருந்து தாக்குதலைத் தொடங்கி அதன்பின்னர், கோவையில் உள்ள ஈஸ்வரன் கோவிலை தாக்கத் திட்டமிட்டிருந்தமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்புடைய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தமிழ்நாடு கிளையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தவரே இந்தத் தாக்குதலை நடத்தியவர் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர கேரள சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த முகமது அசாருதீனுடன் குறித்த நபர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமையும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சந்தேக நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த மேலும் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை மலியும் தேசமாக இலங்கை!



**கொழும்பு, ஒக். 27**

**இலங்கையில் கடந்த ஆண்டில் 521 பேர் கொலை செய்யப்பட்டனர். அதேவேளை, இந்த ஆண்டில் முதல் 9 மாதங்களில் மட்டும் 435 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'அரசாங்கம் மற்றும் பாதுகாப்புத் தரப்புகளால் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலும் நாட்டில் கொலைச் சம்பவங்கள் குறைந்தபாடில்லை. கொலை செய்யப்படாமல் கௌரவமாக மரணிக்கும் உரிமை மனிதனுக்கு இருக்கின்றது. எனவே, படுகொலைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இந்தவருடத்தில் செப்ரெம்பர் 30 ஆம் திகதிவரை 435 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குற்றவாளிகளை கண்டறிவதற்கு மரணபரிசோதனையும் உதவுகின்றது. எனவே, உடற்கூற்றுப் பரிசோதனை நடாத்துதல் தொடர்பாக தற்போது காணப்படும் சட்டம், நடவடிக்கைமுறை மற்றும் பிரயோகங்கள் தொடர்பாகப் பொருத்தமான திருத்தங்களை அடையாளங்கண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பேராசிரியர் ரவீந்திர பெர்னாந்து தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்காக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையை திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. இதற்கமைய குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையை திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது' - என்றார். (ம-44)

## உயிர்கொல்லி ஹெரோய்ன்; இரு நாள்களில் 24 பேர் கைது!

கொழும்பு, ஒக். 27

உயிர்கொல்லி ஹெரோய்னுடன் நாடளாவிய ரீதியில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புகளின் போது உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 24 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், மொனராகலை, அநுராதபுரம், வவுனியா, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கடந்த இரு நாள்களிலே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,22)

## கடந்த ஒன்பது மாதங்களில் 342 எயிட்ஸ் தொற்றாளர்கள்

கொழும்பு, ஒக். 27

நாட்டில் எயிட்ஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளை விடவும், இந்த வருடம் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களில் 342 எயிட்ஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மாத்திரமன்றி, பல்கலைக்கழக மாணவர்களும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதுவரை 50 பல்கலைக்கழக மாணவர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்த வகையில் நாட்டில் எயிட்ஸ் தொற்றாளர்களில் பெரும்பாலானோர் இளம் சமூகத்தினர் எனத் தெரியவருகின்றது. (ஒ-14,22)

## 'லிட்ரோ ஹோம் டெலிவரி' கைபேசி செயலி அறிமுகம்

கொழும்பு, ஒக். 27

வெளிநாடுகளிலுள்ளோர் லிட்ரோ எரிவாயு கொள்கலன்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் லிட்ரோ நிறுவனம், 'லிட்ரோ ஹோம் டெலிவரி' எனும் புதிய கைபேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட இந்த கைபேசி செயலி ஊடாக நுகர்வோர் ஒருவர் எந்தவகையான உள்நாட்டு அல்லது தொழில்துறை எரிவாயு கொள்கலனையும் உலகில் எங்கிருந்தும் பெறமுடியும்.

அத்துடன், நுகர்வோர் உலகில் எங்கிருந்தும் தங்களின் கொடுப்பனவை டொலர் மூலம் செலுத்தி லிட்ரோ எரிவாயு கொள்கலனைப் பெறலாம்.

ஐ.ஓ.எஸ் மற்றும் அன்ரோயிட் கைபேசிகளில் இந்தச் செயலியை பதிவிறக்கம் செய்ய முடியும் என லிட்ரோ நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது. (ச-இ)

## இரட்டைக் குடியுரிமை உள்ளோரை கண்டறிவதற்குத் திட்டங்களில்லை!

இரட்டைக் குடியுரிமை உடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை கண்டறிவதற்கான சட்டபூர்வ பொறிமுறையொன்று அரசாங்கத்திடம் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது இரட்டைக் குடியுரிமை உடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் - இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடாளுமன்றத்தில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின் பிரகாரம், இரட்டைக் குடியுரிமை உடையவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக பதவிவகிக்க முடியாது. அதேபோல இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் யாரெனக் கண்டுபிடிப்பதற்கான சட்டபூர்வமான பொறிமுறையும் அரசாங்கத்திடம் இல்லை. நீதிமன்றம் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்" - என்றார். (ம-44)

## பஸிலின் அரசியலை கட்டுப்படுத்த முடியாது

*பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவிப்பு*



கொழும்பு, ஒக். 27

பஸில் ராஜபக்ச இலங்கையில் அரசியலில் ஈடுபடுவதை எவராலும் தடுக்க முடியாது. தடை ஏற்படுத்தவும் முடியாது. நாடு திரும்பிய கையோடு கட்சியை அவர் வெற்றிகரமாக வழிநடத்துவார். இரட்டைக் குடியுரிமைத் தடைமூலம் அவரின் பயணத்துக்கு கடிவாளம் பூட்ட முடியாது - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இங்கிலாந்து வெள்ளையர்களின் நாடு. கிறிஸ்தவ மதமே பிரதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இந்திய வம்சாவளி ஒருவர், இந்து மதத்தைச் சேர்ந்தவர் பிரதமர் ஆகியுள்ளார். இங்கிலாந்து மக்கள் இனம், மதத்தைப் பார்க்கவில்லை. அவரின் திறமையை மட்டுமே பார்த்தனர். அபிவிருத்தி அடையும் நாட்டின் இயல்பு இது.

ஆனால், எமது நாட்டில் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் விரட்டியடிக்கப்படுகின்றனர். இதனால் அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இரட்டைக் குடியுரிமைக்கு அரசமைப்புத் திருத்தம் ஊடாகத் தடைவிதிப்பதானது நாட்டை கல் யுகத்தை நோக்கி அழைத்துச்செல்வதாகும். அதனால்தான் நாம் அதற்கு வாக்களிக்கவில்லை. இப்படியான அரசமைப்புத் திருத்தங்களை செய்தவர்களுக்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பவம் சிறந்த அறையாகும். பஸில் ராஜபக்ச எமது நாட்டுக்கு வருவார். அவர் அரசியலில் ஈடுபடுவார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அவருக்கு முக்கியமில்லை. அதனால்தான் முன்கூட்டியே பதவி துறந்தார்' - என்றார். (ம-44)

## இந்தியக் கடன் வசதியின் ஊடாக மருந்துகள் கிடைப்பதில் தாமதம்

### துரிதப்படுத்துமாறு வலியுறுத்து

இந்தியக் கடன் வசதியினூடாக முற்பதிவு செய்யப்பட்ட மருந்துகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதால் நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மேலும் தீவிரமடையவுள்ளது என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், 50 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயிரத்துக்கும் அதிகமான மருந்து வகைகளை இந்தியக் கடன் வசதியினூடாக கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தாமதமாகி வருகின்றன. பல வகையான மருந்துகளின் தட்டுப்பாடு இதுவரையில் தீர்க்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் அத்தியாவசிய மருந்துகளின் கையிருப்பு முகாமைத்துவத்தின் கீழ், மருத்துவமனைகளுக்கு மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த நிலைமை நீடித்தால் கடுமையான மருந்துப் பற்றாக்குறை உருவாகி சிகிச்சை சேவைகள் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்படும்.

முற்பதிவு செய்யப்பட்ட மருந்துக் கொள்வனவை தாமதப்படுத்தாது விரைந்து நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
13.04.1959

மறைவு
26.10.2022

## சத்தியரூபராணி மகேந்திரன்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியரூபராணி மகேந்திரன் அவர்கள் நேற்று (26.10.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அகிலாண்டேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும் சதீசன், சஞ்சீவன், மாதுஸா, மௌலியா ஆகியோரின் அன்புத் தாயாரும் திஸ்யந்தினி, சியாமினி, ஆதவன், பிரகாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் சரண்யா, அபிநயா, சோபிகன், நித்தீஸ், டினுஷா, டிவிஷா, ஹரிஸ்மன், கவிசன், ஹேர்ஷிதா, ஹஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர் சூரியபிரபாலினி, சூரியபிரபாகரன், சாளியம்மையார், பசுபதிப்பிள்ளை, நித்தியானந்தராணி, வினோதினி, அமரர் வினோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகிதாசன், மகேஸ்வரி, இராஜேஸ்வரன், அமரர் செல்வரட்ணம், பஞ்சநாதன், குணரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2022) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63/30 பறவைக்குளம்,
திருநெல்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.

# தனியார் துறை நிபுணத்துவம் அதிகரிக்கப்படுவது அவசியம்

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27

பொருளாதார மறுமலர்ச்சிக்காக அரச மற்றும் தனியார் துறைகளில் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் பிரதமர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உற்பத்தியின் வளர்ச்சிக்கான தேவைகளை சீராக வழங்க விநியோகச் சங்கிலியை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை ஆராய வேண்டும். புதுமையான மற்றும் நிலையான விநியோகச் சங்கிலித் தீர்வுகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் என்ற சர்வதேச கருத்தரங்கின் கருப்பொருள் தற்போதைய முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியால் மோசமடைந்துள்ள விநியோகச் சங்கிலி பிரச்சினை களுக்குத் தீர்வுகளை வழங்க முடியும் என்பதால், இது மிகவும் பொருத்தமானது மற்றும் சரியானது.

வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவனத்தின் இராஜதந்திரிகள் பலர் இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களின் விநியோகச் சங்கிலிப் பிரிவுகளில் மிக உயர்ந்த பதவிகளை வகிக்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழங்கல் சங்கிலி வல்லுநர்கள் மிகவும் பெறுமதியான சேவையை வழங்குகின்றனர். அவர்கள் அரச அல்லது தனியார் துறை நிறுவனங்களில் இருந்தாலும், முக்கியமான பங்கு வகிக்கின்றனர் - என்றார். (எ-இ)

# தீபாவளி மோதல்கள் 7 பேர் சிகிச்சையில்

சாவகச்சேரி, ஒக். 27

தீபாவளி தினத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் 11 வயது சிறுமி உட்பட ஏழு பேர் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் சாவகச்சேரிப் பகுதியில் தீபாவளி தினமான கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது. தாக்குதலில் நாவற்குழி, தச்சன்தோப்பு, கொடி காமம், மிருசுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த 11 வயதான சிறுமி, பெண் உட்பட ஏழு பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-14)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 • 01 • 1953



மறைவு
26 • 10 • 2022

## திருமதி அழகராசா இந்திராணி

பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகராசா இந்திராணி நேற்று (26.10.2022) புதன்கிழமை காலமானார்

அன்னார் அழகராசாவின் (ஓய்வுபெற்ற கணக்காளர் - பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்பு மருமகளும், இந்துஜாவின் (ஆசிரியை - கிளிநொச்சி இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும் வர்ணனின் அன்பு மாமியாரும் மதுமிதனின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான ராஜா, மகாராஜா மற்றும் மகாராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இன்பவதி, இந்துமதி, மதிவதனி, ஸ்ரீமத்நடராஜன், குகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0772678614
கணவர் - இ.அழகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"வெகுகாலம் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை துணிந்து சந்திப்பதே மேல்"

- டெஸ்கார்ட்ஸ்

## கண்ணானது கல்வி!


வடக்கு மாகாணத்தில் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் இருந்து இடை விலகுவது சடுதியாக அதிகரித்திருக்கின்றது. 2020 ஆம் ஆண்டுடனும் அதற்கு முன்னைய காலங்களுடனும் ஒப்பிடுகையில் கடந்த வருடமும் இந்த வருடமும் மாணவர் இடைவிலகலானது சுமார் 250 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது என்கின்றன தரவுகள். அதேநேரம் இது வடமாகாணத்துக்கு மட்டுமான பிரச்சினை என்று வரையறுத்துவிடவும் முடியாது, இதுவொரு தேசியப் பிரச்சினை.

நாட்டில் நிலவும் உச்சக்கட்டப் பொருளாதார நலிவு நிலையாலும், வரலாறு காணாத வாழ்வாதாரப் பின்னடைவாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சொல்லிமாளாதவை. அவை தொடர்பான பட்டியல் மிகமிக நீட்சியானது. இந்தப் பட்டியலில் பேராபத்தானது மாணவர்கள் தமது கல்விப் புலத்தில் இருந்து விலகிச் செல்லும் செயற்பாடு. போர்க்கால அடிப்படையில் தீர்வைத் தேட வேண்டியவற்றில் முதன்மையிடமும் இதற்கே. அதேநேரம், எழுத்தறிவிலும் பட்டறிவிலும் ஆசிய வட்டகையிலேயே உயர் சராசரியுடன் தனித்து நிற்கும் இலங்கையர்களின் பெருமைகள், இனிவரும் காலத்தில் இதேபோன்று பேணப்படுமா? என்ற பரிசீலனையும் இப்போது காலத்தேவையானது.

நாட்டில் இப்போதிருக்கும் பொருளாதார நலிவுநிலையானது அனைவருக்கும் பொதுவானதுதான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இருக்கமுடியாது. ஆனால், இடைத்தட்டு – அடித்தட்டு மக்கள் இந்தப் பொருண்மியப் பேரவலத்தால் இன்னுமின்னும் வதைபடுகின்றனர். வதைத்தெறியும் இந்தப் பொருளாதார நலிவுநிலைதான் மாணவர் இடைவிலகல்களுக்கும் வித்திட்டிருக்கின்றது. அதிலும் ஏற்கனவே பொருளாதாரம் தொங்கு நிலையில் நின்ற வடக்கு– கிழக்கு, மலையகக் குடும்பங்களினதும் அவர்களின் குழந்தைகளினதும் வாழ்வு மிகமிக மோசமாகியிருக்கின்றது. வாழ்வதற்கே வழியில்லை என்ற நிலையில், கல்வியை தம் பிள்ளைகளுக்கு வழங்குவதெல்லாம் இனி ஏழைக் குடும்பங்களின் அடுத்தகட்டத் தெரிவுதான். வடக்கு– கிழக்கில் மாணவர்கள் தம் கற்றல் செயற்பாடுகளை முடிவுறுத்திக்கொள்ளும் ஆபத்து ஏற்பட்டிருப்பதும் இந்தப் பின்னணியில்தான்.

நாட்டிலுள்ள அனைத்துச்சிறுவர்களுக்கும் ஊட்டச்சத்தான உணவு கிடைக்கச் செய்ய வேண்டியதும், அவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்த வேண்டியதும் ஜனாதிபதி என்ற ரீதியில் தனது கடமை என்பதை சர்வதேச சிறுவர் தினத்தன்று தனது கொள்கையாக வரித்துக்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, மாணவர்கள் இடைவிலகல் தொடர்பிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். போசணைக் குறைபாடு – மாணவர்கள் கல்விப் புலத்தில் இருந்து இடைவிலகுதல் மாணவ சமூகத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் வியாபாரம் இவை மூன்றும் ஒரே புள்ளியில் வைக்கப்பட்டு தீர்வைத் தேடவேண்டிய விடயங்கள். இந்த மூன்று விடயங்களும் பார்வைக்கு வெவ்வேறுபட்டவையாகத் தென்பட்டாலும் அடிப்படையில் ஒன்று மற்றொன்றுடன் நெருக்கமாகத் தொடர்புறவே செய்கின்றது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பர். இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சிதில நிலையும் அதுசார் பிரச்சினைகளும் ஒன்றும் தீர்க்க முடியாத பிரச்சினைகள் அல்ல. இன்னும் ஐந்து வருடங்களிலாவது பொருளாதாரத்தை ஓரளவு மீட்டுவிட முடியும். ஆனால், கல்வியை இழந்துவிட்டால் அதை மீட்டெடுக்கவே முடியாது. சில பிரச்சினைகளுக்கான தீர்வு நிபந்தனையற்ற ஒற்றுமை மூலம் தேடப்பட வேண்டியது. அத்தகையதொரு பிரச்சினைதான் மாணவர்களின் இடைவிலகலும். ஒன்றுபடுங்கள் வென்றெடுங்கள்.




# ரணிலின் வாக்குறுதிகளை வரவேற்கிறது கூட்டமைப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 27**

**இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு புதிய அரசமைப்பூடாக ஒரு வருட காலத்துக்குள் செய்து முடிக்கப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசமைப்பூடாக இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலைத்திட்டம் உடனடியாக நடைபெறவேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்ற போது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களுடைய உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு தூரம் சேர்ந்து செயற்பட்டோம் என்பதை அவர் அறிவார். 2016 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புகள் வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது. அந்த வழிகாட்டல் குழுவிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம்.

புதிய அரசமைப்புத் தொடர்பான இரண்டு இடைக்கால அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடு நிபுணர் குழுவினால் வரையப்பட்ட ஒரு முழுமையான அரசமைப்பு வரைவுகூட அப்பொழுது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தென்பகுதியில் உள்ள ஏழு மாகாண சபைகளையும் உள்ளடக்கிச் செயற்பட்டோம். இதன் அடிப்படையில் தொடர்ந்து முன்செல்ல ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் ஒரு வருட காலத்துக்குள் இதை முழுமையாக்க முடியும் - என்றார். (ம-26)

# சீன நன்கொடை அரிசி நாட்டை வந்தடைந்தது

கொழும்பு, ஒக். 27

இலங்கைக்கு நன்கொடையாக சீனாவால் வழங்கப்பட்ட 500 மெற்றிக் தொன் அரிசித் தொகை அடங்கிய கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த அரிசி ஆதரவற்ற பாடசாலை மாணவர்களுக்கு விரைவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் வாரமளவில் சீனாவின் நன்கொடையில் 500 மெற்றிக்தொன் அரிசிக் கப்பல் ஒன்று நாட்டை வந்தடையும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)


**நாளை** 28.10.2022 வெள்ளிக்கிழமை ஐப்பசி 11

சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம்: 10.33 - 12.03

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவு



பிறப்பு 27 - 07 - 1941

இறப்பு 01 - 11 - 2016

## அமரர் கந்தையா இராசேந்திரம்

(ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்)

திதி: துதியை

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் ஆறாண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாமல் எம்முடனே இருப்பீர்கள்

குடும்பத்தினர்
கலைமணி வீதி, கட்டைப்பிராய்.

(CS 21379) (3/8)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 • 11 • 2003

மறைவு 07 • 11 • 2021

## அமரர் மகிந்தன்

திதி: 27.10.2022

ஆண்டு ஒன்று சென்றதைய்யா
ஆறவில்லை உன் துயரம்
உம்மைக் கொன்ற கொடியவள் தான் யாரோ?
காலம் தான் உமக்கு பதில் சொல்லும்
ஐயா உம் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்
இராசையா முருகதாஸ்
பிரான்ஸ்.

(ச.38351) (2.6)



யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்தர வகுப்பு ஊடகக் கற்கைநெறி மாணவர்கள், ஊடக ஆசிரியர்கள் உதயன் பணிமனையை நேற்று பார்வையிட்டனர்.

# நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

08 மாதம் நிரம்பிய டோமன் இன நாய்கள் ஒரு சோடி கூட்டுடன் விற்பனைக்குண்டு.

**076 678 9158**

பண்டத்தரிப்பு

# நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல : 1662

## பகிரங்க மூடிய மீள் கூறுவிலை

நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான லொறி விற்பனை செய்யப்படவுள்ளது.

**லொறி இல** : LH 9813

**பார்வையிடும் இடம்** : கூட்டுறவுச் சபை அச்சகம்
இல 38 K.K.S வீதி யாழ்ப்பாணம்,
வீரசிங்க மண்டப அருகாமை

**நேரம்** : காலை 9.30 மணி -
பிற்பகல் 4.00 மணி வரை

**பார்வையிடும் திகதி** : 27.10.2022 - 03.11.2022 வரை

மேற்படி லொறியை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் 1000/- (ஆயிரம்) ஐ பொது முகாமையாளர் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு காசுக் கட்டளையாக அனுப்பமுடியும். அல்லது நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளமுடியும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் **03.11.2022** திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு **தலைவர் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 12ஆம் வட்டாரம் நெடுந்தீவு** என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாக சங்கத்தில் ஒப்படைக்கலாம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிடவும்.

மூடிய கூறுவிலைகள் 05.11.2022 ஆம் திகதி 12.00 மணிக்கு நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் சமுகமளிக்க முடியும்.

**குறிப்பு :**

மேற்படி கூறுவிலைக்கு சுயமாக தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் முழுப்பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் முகவரி கூறுவிலை மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கும் வகையில் இருத்தல் வேண்டும். குறித்த லொறி விற்பனை தொடர்பான இறுதி முடிவு இயக்குனர் சபைக்கு உரியதாகும்.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்,
நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
077 662 4121, 076031 5007** (CS 21386) (3/6)

# தீபாவளியன்று கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 27

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை மறித்து சோதனை மேற்கொண்டபோதே அவர்களிடம் இருந்து 50 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-113)

# யாழ்.வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்.வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் வணிகர் கழகப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெற்றது.

அதில் யாழ்.வணிகர்கழகத்தின் தலைவராக இ.ஜெயசேகரன், உபதலைவராக இ.ஜனக்குமார், செயலாளராக சி.கேசவன், உபசெயலாளராக ந.ஜெகமோகன், பொருளாளராக செ.கஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-14)

# வவுனியா தெற்குதமிழ் பிரதேச சபை
## 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்
## பொதுமக்கள் பார்வைக்கு

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக 2022.10.28 இலிருந்து 2022.11.08 ஆம் திகதிவரை வவுனியா தெற்குதமிழ் பிரதேசசபையில் வைக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் வருமானங்கள், செலவினங்கள் சம்பந்தமான விடயங்களும் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்திவேலைத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ 2022.11.08 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதை அறியத்தருகிறேன்.

**த.யோகராஜா,
தவிசாளர்,
வவுனியாதெற்குதமிழ் பிரதேச சபை.**

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி


## அமரர் பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

அன்னையின் மடியில் 20.07.1982

அரக்கனின் பிடியில் 11.11.2007

திதி: துதியை 27.11.2022

எங்கள் அன்பின் ஜெயாவே!
ஆருயிர் செல்வமே ஜெயா,
ஆண்டுகள் பதினைந்து ஆனதடா
ஆனாலும் ஆறவில்லை உன் பிரிவு எமைவிட்டு
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆறாதையா உன் பிரிவால் எம் மனம்
கந்தசஷ்டி திருநாள் வந்ததுமே
உன் கள்ளமில்லா சிரிப்பையும் கபடமில்லா
மனதையும் காண்போர் எல்லாம் கேட்கும்போது.
வெந்து வேகுதையா எம் மனது எங்கள் ஜெயா.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



தாவளை இயற்றாலை, உன் பிரிவால் துயருறும்
தொடர்புகட்கு: 076 153 7507
குடும்பத்தினர்.

(ச.38350) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சிவஸ்கந்தா சரோஜினிதேவி

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குனர், சிறீலங்கா தொலைத்தொடர்பு திணைக்களம்)

திதி : துதியை
(27.10.2022)



மடியினிலே தூங்கிவிட மண்ணிலே நீருமில்லை
தேடியே பார்க்கிறோம் தேற்றயாருமில்லை
மாடி வீடு தந்திடுமா மாசற்ற அன்புதனை
கூடியே வாழ்ந்தோம் கூட்டைக் கலைத்ததுயார்?
ஈடிணையில்லா ஈகைப் பேரொளியை
ஓடியே வந்து எடுத்தே சென்றுவிட்டான் எமன்
வாடிய எங்கள் முகம் பார்த்தும் இரங்கவில்லை அவன்
இடியே வந்தாலும் உடையாத அம்மாவை
பாடையிலே போக வைத்துவிட்டான் பாவிக்கடவுள்
முடியாதா இவ்வாழ்வென்ற முடிவற்ற கேள்விகளுடன்
கடிகாரமும் ஓடவில்லை கால் மணித்துளிகூட ஆனாலும்
ஓடியே போனது பதினொரு ஆண்டுகள்
தட்டிக்கொடுத்துவிட தந்தையுமில்லை
கட்டியணைத்துவிட தாயுமில்லாமல் கதறுகிறோம்.
கொட்டிக் கொடுத்துவிட கோடி இருந்தென்ன
ஊட்டிவளர்த்துவிட்ட தாய்க்கு ஈடாகுமா?
காட்டியே கொடுத்து சிலர் மாட்டியேவிட்டபோதும்
பூட்டிய கதவினை உடைத்து கூட்டியே வந்தவர் அம்மா
வாட்டிய துயர்கண்டு வரவில்லை ஏனோ?
ஏட்டினிலே எழுதி பூட்டியும் வந்துவிட்டாள்
பாட்டி எங்கே என்று வீட்டிலே நீருமில்லை
தொட்டிடா தொலைவு நீரும் சென்றதும் ஏனோ?


மலர்வு
14.09.1941

உதிர்வு
28.10.2011

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(CS 47321) (4/6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
31.12.1946

மறைவு
24.10.2022

## பத்மநாதன் சபாநாதன்

காரைநகர் நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமகாவும் கொண்ட பத்மநாதன் சபாநாதன் அவர்கள் கடந்த (24.10.2022) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் - சிவக்கொழுந்து, தர்மகுலராஜா - சுகிர்தராணி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் பிறேமராகினி (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் அன்புக் கணவரும், மஞ்சுளா, மனோகரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ் சென்றவர்களான இராசமணி, கார்த்திகேயனி, மற்றும் சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமிர்தலிங்கம், மாலினி ஆகியோரின் மாமனாரும், வனஜா, யமுனா, மலரவன், ஹரி, அனுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக லோட்டன் வீதி, மானிப்பாய் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (27.10.2022) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று 11.00 மணிக்கு பிப்பிலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மனைவி : 077 923 2317
மனோகரன் (மகன்), மஞ்சுளா : 076 774 1153


(CR 38357) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வருஷாப்திக (சிராத்தம்) அழைப்பு

அன்னை மடியில் 08 • 07 • 1959



இறைவன் அடியில் 06 • 11 • 2021

கடந்த (06.11.2021) சனிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் தந்தையும் இல்லத் தலைவருமாகிய

## திரு. அம்பலவாணர் சோமசுந்தரம்

(குழாய்க்கிணறு சோதி)

அவர்களின் சிரார்த்த கிரியைகள் இன்று (27.10.2022) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

சோதி குடும்பத்தினர்.

(cs 21385) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த ஆண்டு 06.11.2021 பஞ்சபூதங்களில் ஒன்றான நீரோடு கரைந்து
மறைந்து போன மூளாயூர்

## பிரபாகரன் றஜீபன்

அவர்களை அவர் மறைந்த ஓராண்டு நிறைவில் நாம் நினைவு கூர்வோம்

தோற்றம் 14 - 03 - 2003



மறைவு 06 - 11 - 2021

திதி: 27.10.2022

நீ நடந்த பாதையெங்கும் புல்முளைத்துப் பூத்தது
நீ படித்த வகுப்பறையில் ஓர் கதிரை மிஞ்சுது
நீ படுத்த படுக்கையின்னும் விரித்தபடி கிடக்குது
நீயிருந்த வீட்டிலொரு கோப்பை சோறு மிஞ்சுது
நீ வருவாய் என்று பூக்கள் வாடி விழா திருக்குது
நீ மறைந்த இரவு இன்னும் விடியாமலே இருக்குது
நீ மறைந்த ஆண்டு ஒன்றும் ஓர் நொடிக்குள் வந்தது
ஓடி வா றஜீவண்ணா விடியலை நாம் காணவே!


மூளாய் மத்தி,
சுழிபுரம்

றஜீபனைக் காணத்துடிக்கும்
ர. விஸ்ணுகாந்தன்

(CS 21378) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1936



மறைவு 26 - 10 - 2022

## பொன்னையா நடராசா

யாழ்ப்பாணம் மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் நெளுக்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா அவர்கள் நேற்று (26.10.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மகனும், வீரசிங்கம் - இலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைராசா, பரராசசிங்கம், தங்கம்மா, அன்னரத்தினம் மற்றும் அழகரத்தினம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகம்மா, கனகரத்தினம், இராசமணி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோராணி (ராசாத்தி - ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு கல்வி வலையம்) வசந்தன் (இந்தியா), பேரின்பநாயகி (சுவிஸ்), நவராணி (ஜேர்மனி) முருகதாஸ் (நெளுக்குளம்) கனகசபாபதி (சசி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசங்கர், விஜிதா (இந்தியா), சிவனேசன் (சுவிஸ்), ஆனந்தன் (ஜேர்மனி) செந்துஜா (நெளுக்குளம்), ராஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருஷ்ணா, யாழதன், விஷ்னுகன், நிவேதன், சினேகன், அனித்தா, அர்ச்சனா, சஜித், டயானி, கிஷானி, விந்துசன், மெலோசன் கனிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


முருகதாஸ் (மகன்) : 077 230 1080

தகவல் :
குடும்பத்தினர்

(CS 1047) (3/6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 • 06 • 1958



இறப்பு 25 • 10 • 2022

## திரு. கந்தையா கந்தசாமி

(ரிப்ரொப் உணவக உரிமையாளர்)

யாழ். அரசடி வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா கந்தசாமி நேற்றுமுன்தினம் (25.10.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், செல்வரஞ்சினியின் அன்புக் கணவரும், கார்த்தீபன், அர்ஜீன், அர்ஜீத், ஆரணி, அனுசியன், தீபநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜவானி, கௌஷிகா. நயோமி, ஜெயவாணன், ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸஸ்மிதன், விபிஷ்டன், அஸ்ரி, ரிஸ்வந்த், ரஸ்மியா, சாதனா, ஆரணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (28.10.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.47322) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை தொழில்நுட்பபீட ஆய்வு மாநாடு அறிவியல்நகரில்



யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்பபீடத்தால் 'தொழில்நுட்ப முன்னேற்றமும், புத்தாக்கமும்' என்ற தலைப்பில் ஆய்வு மாநாடு கிளிநொச்சி - அறிவியல்நகரில் அமைந்துள்ள தொழில்நுட்பபீட மாநாட்டு மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்பபீடத்தின் ஆய்வுத் தலைவரும், பீடாதிபதியுமான பேராசிரியர் சிவமதி சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை பசுமைக் கட்டுமானப் பேரவையின் தலைவரும், பேராதனைப் பல்கலைக்கழக குடிசார் பொறியியல் துறை சிரேஷ்ட பேராசிரியருமான ரஞ்சித் திசாநாயக்க கலந்துகொண்டு 'பசுமை சார் கண்டுபிடிப்புகளும், தொழில் முனைவுகளும்' என்ற தலைப்பில் முதன்மை உரை யாற்றினார்.

ஆய்வு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட 52 ஆய்வுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 37 ஆய்வுகள் தெரிவுசெய்யப்பட்டன.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா, 2022 ஆய்வு மாநாட்டின் வழிப்படுத்துநர் கலாநிதி எஸ். கௌதமன், ஆய்வு வெளி யீடுகளின் மாநாட்டின் பிரதம ஆசிரியர் பொறியியலாளர் டி.எச்.டீ.ஏ.ஈ. ஜெயசிங்க, மாநாட்டின் இணைச் செயலாளர் கலாநிதி டி.எச். கே நவரட்ண மற்றும் பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.






# விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் இல்லை!

## சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 27

ரணில் விக்கிரமசிங்க மக்களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை. அவர் தற்காலிகமாக பதவியில் நிறுத்தப்பட்ட ஒருவர். ஆனால், அரசமைப்பின் 40 சரத்தில் உள்ள இடைவெளியை பயன்படுத்தி ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் தற்போது தனக்கு நிறைவேற்று அதிகாரம் உள்ளது என்று எண்ணிக் கொண்டுள்ளார்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் அரசமைப்பின்படி நாட்டின் பாதுகாப்பு, நிறைவேற்று அதிகாரமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாலேயே செயல்படுத்த வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதுவித அதிகாரங்களும் இல்லை.

40 சரத்தில் உள்ள இடைவெளியை பயன்படுத்தி ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் தற்போது தனக்கு நிறைவேற்று அதிகாரம் உள்ளது என்று எண்ணிக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி இல்லாத நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு வந்த ஜனாதிபதி 6 மாதங்களுக்கு மேல் பதவியில் நீடிக்க முடியாது என்று நாம் திருத்தங்களை மேற்கொண்டோம். அதை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அதை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்கள் எழுச்சிப் போராட்டத்தின்போது அலரி மாளிகையில் இருந்து தப்பிச் சென்று திருகோணமலையில் பதுங்கியிருந்த மஹிந்த ராஜபக்ச இன்று களுத்துறையில் மீண்டும் 'எக்வ நெகிடிமு' என்கிறார் - என்றார். (ஏ)

# விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு 4 லட்சம் பெறுமதியில் ஆடைகள்

யாழ்ப்பாணம், ஒக். 27

கொடிகாமம் வணிகர் மன்றத்தால் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு ரூபா 4 லட்சம் பெறுமதியான ஆடைகள் கொடிகாமம் வணிகர் மன்ற மண்டபத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன.

விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஊடாக 154 ஆண்களுக்கும் 146 பெண்களுக்கும் வழங்குவதற்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் விழிப்புலனற்றோர் சங்கத் தலைவரிடம் வணிகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது. (எ-14,159)

# கூரையிலிருந்து வீழ்ந்து குடும்பத்தலைவர் காயம்!

யாழ்ப்பாணம், ஒக். 27

50 அடி கட்டடத்தின் கூரையிலிருந்து தவறி வீழ்ந்த 34 வயதான குடும்பத்தலைவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சுன்னாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கட்டடத்தின் கூரைக்கு தகரம் பொருத்திய வேளையில் குடும்பத்தலைவர் தவறி விழுந்துள்ளார். அதன்போது அவரின் காலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14.9)

# சீதுவைப் பிரதேசத்தில் கொக்கெய்ன் மீட்பு

கொழும்பு, ஒக். 27

சீதுவை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கொக்கெய்ன் உள்ளிட்ட பல போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்தப் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சீதுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பதுர பிரதேசத்தில் வீடொன்றில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே 5 கிராம் 50 கொக்கெய்ன், 100 கிராம் ஐஸ் போதைப்பொருள், 70 கிராம் அஸீஸ் போதைப் பொருள், 30 கிராம் குரூஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன. அவற்றை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆணொருவரும் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணையின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெரோய்ன் போதைப்பொருள் இலங்கையில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், ஹெரோய்னை விடவும் அதி அபாயகரமான போதைப்பொருளாகக் கருதப்படும் கொக்கெய்ன் போதைப்பொருள் இலங்கையில் சில இடங்களில் தற்போது மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தாண்டு பெப்ரவரி வரை நிலைமை மேலும் மோசமாகும்

## இலங்கைக்கு உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 27**

**இலங்கையில் உக்கிரமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி இம்மாதம் முதல் அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் மிக மோசமடையக்கூடும் என உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.**

கொழும்பின் நகர்ப்புறங்களில் விலை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் படி, உணவுப் பணவீக்கம், கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதத்திலிருந்து செப்ரெம்பர் மாதத்தில் 94.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதற்கமைய இம்மாதம் முதல் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான பருவத்தில் நாட்டுக்கு உதவிகள் கிடைக்காது இலங்கையின் நிலைமை மேலும் மோசமடையக்கூடும்.

இதேவேளை மூன்றுமாத காலத்துக்கு ஒரு மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தால் ஆயிரத்து 475 மெற்றிக்தொன் அரிசி மற்றும் 775 மெற்றிக் தொன் இரும்புச் சத்துள்ள அரிசி ஆகியவை வழங்கப்படவுள்ளன. அவற்றின் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என உலக உணவுத்திட்டம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# நாட்டின் வளர்ச்சி வேகம் மறைப் பெறுமானத்தில் வீழ்ச்சி

## பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 27

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் வளர்ச்சி வேகம் மறைப் பெறுமானத்தில் வீழ்ச்சியடைந்ததில்லை.

என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் மறை 7:8 சதவீதமாக கணிப்பிடப்பட்டுள்ளது. இதன்காரணமாக நாட்டில் தற்போது ரூபாவும் இல்லை. டொலரும் இல்லை. இது குறிப்பிட்டவொரு அரசியல்வாதியால் தோற்றம் பெற்ற பிரச்சினை அல்ல. கடனை மீள செலுத்துவதற்காக கடன் பெறப்பட்டுள்ளது. அதற்கும் ஒரு வரையறை காணப்படுகிறது. எனினும் அந்த வரையறையையும் மீறி மேலும் மேலும் கடன் பெறப்பட்டுள்ளது.

தனிநபரொருவருக்கு வருமானத்தை விட செலவுகள் அதிகமாகக் காணப்பட்டால் , அவருக்கு கடன் பெற வேண்டிய நிலைமை ஏற்படும். இவ்வாறு பெற்ற கடன்களை மீள செலுத்த முடியாத நிலைமையில் 'என் மரணத்துக்கு நானே காரணம்' என்று கடிதம் எழுதி வைத்து விட்டு , உயிரை மாய்த்துக்கொள்வார். ஆனால் அரசாங்கத்தால் அவ்வாறு செய்ய முடியாது - என்றார். (ச-இ)



# வீதியில் கொட்டப்படுகின்ற கோழிக்கழிவால் துர்நாற்றம்

## புதுக்குடியிருப்பு - கைவேலி மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஒக். 27


முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியிலுள்ள கைவேலிப் பகுதியின் வீதியோரத்தில் கோழிக்கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இதனால் வீதியால், துர்நாற்றத்துக்கு மத்தியிலேயே பயணிக்க வேண்டிய அசௌரிய நிலை தோன்றியுள்ளது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இறைச்சிக்காக உரிக்கப்படும் கோழியின் கழிவுகள் கைவேலிப் பகுதி வயல் நிலங்களிலுள்ள வீதியோரமாக கொட்டப்படுகின்றன.

கொட்டப்படும் கழிவுகளால் மழைகாலத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் அருகிலுள்ள வயல் நிலங்களிலும் கழிவுகள் கலக்கின்றன.

இந்தப் பாதக செயற்பாட்டால் துர்நாற்றத்தின் மத்தியிலேயே வீதியால் பயணிக்க வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மேலும் கோரிக்கை விடுத்தனர். (ச-19)




சிங்கர் பினான்ஸின் 48 ஆவது கிளை கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. பிரதி பிராந்திய முகாமையாளர் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழாவில் சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி துசாந்த் அமலசூரிய கிளையைத் திறந்து வைத்தார் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.சிறிமோகனும் கலந்துகொண்டார். (ஓ-14,113)

# கலை வளவாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 27

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடகசங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற்றும் இசைவாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, பாடநெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய தெல்லிப்பழைப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள், தங்களது சுயவிவரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி. என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 0779770732, 0759769654 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்யும் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பருத்தித்துறை பிரதேசசெயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தை பருத்தித்துறை பிரதேசசெயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தனிப்பட்ட முறையில் கலாபூஷண விருது விண்ணப்பங்கள் கோரப்படாது என்பதுடன் கடந்த வருடங்களில் கலைஞர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2022 ஆம் ஆண்டுக்கோ அல்லது எதிர்வரும் வருடங்களுக்கோ செல்லுபடியாகாது என்றும் பருத்தித்துறை பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (ஓ-14)

# திறப்பு விழா

சாவகச்சேரி, ஒக். 27

சித்த விசேட சிகிச்சைக் கட்டணப் பிரிவும் மருந்து விற்பனை நிலையத் திறப்பு விழாவும் அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விழாவில் விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.சமன் பந்துலசேன, வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.மோகநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-14,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

'தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெறவேண்டும் என்பதே எனது நோக்கம்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதேவேளை, 'தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தவறவிடக்கூடாது. அவர்கள் கட்சி, பேதமின்றி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படவேண்டும்' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியிருந்தார்.

இவர்கள் இருவரினதும் கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசமைப்பை உருவாக்கவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைந்து பயணிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்நேரமும் தயாராகவே உள்ளது.

ஆனால், இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாகச் செயற்படுத்தும் பணியில் இறங்கவேண்டும். அப்போதுதான் எமக்கும் அதில் பூரண நம்பிக்கை ஏற்பட்டு முழு ஆதரவை வழங்கமுடியும்.

காலத்தை இழுத்தடிக்காமல் ஒரு வருடத்துக்குள் தமிழர்களுக்கு நிலையான தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினால் அவர் இலங்கை வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பிடிப்பார் - என்றார். (அ-எ-22)

## உடைமையில்...

சந்தேகநபருக்கு பிணை அனுமதி வழங்கிய நீதிமன்று, பொலிஸாரால் அவருக்கு அச்சுறுத்தல் இருப்பின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறையிட முடியும் என்று தெரிவித்தது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஹெரோய்ன் போதைப் பாவனை அதிகரித்துள்ளது என்று பல தரப்புகளாலும் சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-125)

## ஐக்கிய...

கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பலர் கலந்துகொண்ட தேசிய மக்கள் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடியது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மருந்துப் பற்றாக்குறைக்கு முக்கியமான காரணம் டொலர் தட்டுப்பாடும், இறக்குமதி முறையின் பிரச்சினையும்தான். பண்டோரா பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள படி நாடு இழந்த பில்லியன் கணக்கான டொலரைக் கொண்டு வருவதே இந்த டொலர் பிரச்சினையைத் தீர்க்க சிறந்த தீர்வாகும். அவ்வாறு இல்லாமல் சீனா, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளிடமிருந்து கடன் பெறுவதல்ல.

இதன் மூலம் மருந்துத் தட்டுப்பாடு மட்டுமன்றி, நாட்டின் டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிட்டும். இது தனிநபர்களைக் குறிவைப்பதன் மூலம் அன்றி, மாறாக தவறு செய்த மற்றும் திருடிய, கொள்ளையடித்த, அரச வளங்கள் மற்றும் அரச சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளவேண்டும். இந்தப் பணமும் சொத்துக்களும் 220 இலட்சம் பொது மக்களின் சொத்து ஆகும்.

ஆனால், தற்போதைய அரசு அந்த வழியைப் பின்பற்றுமா என்பது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் என்றாலும், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அரசின் கீழ், திருடப்பட்ட பணம் அனைத்தும் தெளிவான, வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புடனும் தொடர்புடைய அனைத்து வளங்களும் மீட்கப்படும்.

நாட்டில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக்குறையைத் தீர்க்க எதிர்க்கட்சியில் இருந்தும் பெரிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் இதுவரை 165 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவமனை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (அ-எ-22)

## கோப்பாயில்...

நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் கோப்பாயில் நடந்துள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உபதபாலதிபரான பெண், தனது பிள்ளையை ஏற்றிச் சென்ற போது சைக்கிளின் முன்கூடையில் பணத்துடன் கூடிய பை இருந்துள்ளது. அதில் உபதபாலதிபரின் சொந்தப் பணம் மற்றும் அலுவலகப் பணம் என்பன இருந்தன என்று கூறப்படுகின்றது. அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், முன்கூடையில் இருந்த பணத்துடன் கூடிய பையை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-125)

## அமெ. துணைத்...

இந்தியா ஆகிய நாடுகளின் அழுத்தம் தேவை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளபோதும் அது விரைவாக நடப்பதற்குரிய அழுத்தங்களை அமெரிக்கா போன்ற நாடுகள் கொடுக்க வேண்டுமெனக் கோரினோம் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அதேவேளை, பாதுகாப்புத் தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான விவரங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் டக் சோனெக்குக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோருடனும் டக் சோனெக் கலந்துரையாடியுள்ளார்.

அதேநேரம், மயிலிட்டி மீள்குடியேற்றக் குழுவினரைச் சந்தித்த டக் சோனெக், மீள்குடியமர்வு தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். வலி.கிழக்கில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தனைச் சந்தித்துக் கேட்டறிந்து கொண்டார் டக் சோனெக்.

மயிலிட்டித் துறைமுகத்துக்குச் சென்ற அவர் துறைமுக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அதேநேரம், மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், பொருளாதார நிலைமைகள் தொடர்பாகவும் அவர் கேட்டறிந்தார். (அ-எ-26-20)

## உயிர்ப்...

ஆண்டுடன் ஒப்பிடும்போது 3 மடங்கு அதிகரித்துள்ளது. சில நாள்கள் காய்ச்சல் நீடிக்குமானால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர்கள் காய்ச்சல் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் பரசிட்டமோல் மட்டும் அருந்தவேண்டும் - என்றார். (அ-எ)

## மருந்துத்...

மேற்கொள்வதற்காக அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய பிரத்தியேகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றைத் தடையின்றி மக்களுக்கு விநியோகிப்பது தொடர்பில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுகின்றது.

விநியோக முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலாளர், பிரதமர் செயலாளர் ஆகியோரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

மருந்துக் கொள்வனவுக்காகக் கிடைத்த பெரும்பாலான நிதி உதவிகள் கடனுதவிகளாகும். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் தொடர்ச்சியாக மீள் செலுத்தப்பட்டு வருகின்றன. கடன்களை மீளச் செலுத்துவதால் உதவிகளும் கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைத்த உதவிகளில் சில வீதிச் சீரமைப்புக்களும் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (அ-எ)

## மீளவும்...

பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சமூகப் பாதுகாப்பு ஒத்துழைப்பு வரியை மின் பயனாளர்களிடம் அறவிடப்படுவதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்துக்கு சமூகப் பாதுகாப்பு ஒத்துழைப்பு வரியை அறவிடாமல் விலக்களிக்கவேண்டும் என்று நிதியமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வரிக்கு அனைத்து நிறுவனங்களும் உள்வாங்கப்பட்டிருப்பதால் விலக்களிப்பு செய்ய முடியாது என நிதி அமைச்சு பதிலளித்துள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க சம்மேளனக் கூட்டமைப்பின் இணைப்பாளர் ரஞ்சன் ஜயலால், மின்சாரக் கட்டணத்தை மேலும் 30 வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

அரசாங்கம் ஏற்கனவே 75 சதவீத மின் கட்டண அதிகரிப்பை மேற்கொண்டுள்ள நிலையில், மீண்டும் 30 சதவீத மின் கட்டண அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள அவர், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-எ)

## பரு. இ.போ.ச....

கோண்டாவில் பிராந்திய பணிமனையில் கையொப்பமிடுவதற்கும், அங்கிருந்த பணியாற்றவும் முகாமையாளருக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் பருத்தித்துறை இ.போ.ச. சாலையில் இந்தப் பிரச்சினை தொடர்ந்தவண்ணமே இருந்தது.

இதன் தொடர்ச்சியாக முகாமையாளருக்கு ஆதரவான தரப்பு அண்மையில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. எனினும் மற்றைய தரப்பு ஆதரவு வழங்கவில்லை. இந்தப் பிரச்சினையால் கடந்த 20 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு சேவையில் ஈடுபட்ட திருகோணமலை - பருத்தித்துறை பஸ் பணிப்புறக்கணிப்பு என்று தெரிவிக்கப்பட்டு மறிக்கப்பட்டது. ஆயினும் அதன்பின்னர் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவளிக்கமாட்டோம் என்று தெரிவித்து ஏனைய பஸ் சேவைகள் நடைபெற்றன. திருகோணமலை - பருத்தித்துறை பஸ் சேவை மறிக்கப்பட்டால் இ.போ.ச. சாலைக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த நிலைமையில் நேற்றுக்காலை முகாமையாளர், பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்குச் சென்றுள்ளார். அவரைக் கோண்டாவில் பணிமனையிலேயே பணியாற்றுமாறு பணிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் அங்கு வந்தமை தொடர்பாக அங்கிருந்தவர்கள் கேள்வி எழுப்பியதை அடுத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அந்த வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினராலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முறைப்பாட்டுக்கு அமைய முகாமையாளர் தரப்பில் முகாமையாளர் உட்பட 4 பேரும் மற்றைய தரப்பில் 7 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினரையும் சமரசம் செய்ய முயன்றபோதும் அது பயனிக்கவில்லை. அதையடுத்து அவர்கள் மீது 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குப் பதிவு செய்த பருத்தித்துறை பொலிஸார், அவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் செல்ல அவர்களை அனுமதித்ததுடன், கடும் எச்சரிக்கையும் செய்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடபிராந்திய இ.போ.ச. முகாமையாளர் குணபாலசிங்கம், சாலையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமையை அடுத்து அங்கு செல்லவேண்டாம் என்று முகாமையாளருக்குப் பணிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர் கொழும்பில் அதிகாரிகளுடன் தொலைபேசியில் உரையாடிவிட்டு இன்று (நேற்று) அங்கு சென்றுள்ளார். உரிய அதிகாரிகளின் அனுமதி பெற்றுச் செல்லவேண்டும் என்று கொழும்பில் இருந்து அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும், அதை அவர் கடைப்பிடிக்கவில்லை. அதனாலேயே அங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது. உரிய அனுமதி இல்லாது அவர் இனிமேல் அங்கு செல்லக்கூடாது என்று இன்றும் (நேற்று) எழுத்துமூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த உலகத்துக்கு சீனா மிக அவசியம்

## ஜின் பிங் தெரிவிப்பு



**பீஜிங், ஒக். 27**

**இந்த உலகத்துக்குச் சீனா தேவை. அதேபோல் சீனாவும் உலக நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாமல் வளர முடியாது என்று 3ஆவது முறையாக ஜனாதிபதியான ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.**

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு, சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

இதில் கட்சி நிர்வாகிகள் 2 ஆயிரத்து 300 பேர் கலந்து கொண்டனர். இதில் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜி ஜின்பிங் மூன்றாவது முறையாகவும் சீன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 40 ஆண்டுகளுக்கும் மேல் கடினமான முயற்சியில் அதிவேக பொருளாதார வளர்ச்சி, நீடித்த சமுதாய உறுதித்தன்மை என இரண்டு சாதனைகளை நிகழ்த்தி யுள்ளோம். கட்சியின் நம்பிக்கை, சீன மக்களின் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் நான் அதிக சிரத்தையுடன் பணி செய்வேன் - என்றார்.

ஜி ஜின்பிங் சீனாவின் இராணுவ மத்திய குழுவுக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். 69 வயதாகும் ஜி ஜின்பிங், சீன ஜனாதிபதியாக 3ஆவது முறையாக தெரிவு செய்யப்பட்டிருந்தாலும்கூட அவரது நியமனத்துக்கான அறிவிப்பு மார்ச் மாதம் நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டத்தில் வெளியிடப்படும். மாவோ சே துங்குக்குப் பின்னர் அதிகாரக்குவிப்பில் தனிமுத்திரை பதித்தவர் ஜி ஜின்பிங் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

தமிழ்நாட்டின்

# காலநிலை மாற்ற குழுவில் எரிக் சொல்ஹெய்ம்

சென்னை, ஒக். 27

தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்துக்கான ஆட்சிப் பேரவையின் உறுப்பினராக நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது ருவிற்றர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காலநிலைமாற்றம் தொடர்பான தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆட்சிப் பேரவையில் இணைந்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறித்து பெருமிதம் அடைகிறேன். இந்தப் பேரவைக்கு தமிழக முதல்வர் தலைவராக உள்ளார். மீள்புதுப்பிக் கத்தக்க சக்தி வளங்களுக்கான வாய்ப்பு தமிழ்நாட்டில் அதிகமாகவுள்ளது என எரிக்சொல்ஹெய்ம் மேலும் அதில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். சுண்டுக்குளி ஈச்சமோட்டை வீதியில் நவீன வசதிகளுடன் கூடிய 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச /தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 076 176 5177

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 பாதையுடன். நன்னீர் ஊற்று நிலம். நல்ல சூழல்
- 775 வழி பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1½ Km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து)
- 1 பரப்பின் விலை 2 லட்சம்

தொடர்புகளுக்கு: 076-7558606 074-3187263

# 60,000 தொன் நிலக்கரி வந்தடைவு

## நுரைச்சோலை தடையின்றி சேவை

கொழும்பு, ஒக். 27

60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி அடங்கிய மேலுமொரு நிலக்கரி கப்பல் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலிலிருந்து நிலக்கரி தரையிறக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் இடையூறின்றி முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை நிலக்கரி ஒப்பந்தம் செய்யப்பட்ட குறித்த நிறுவனத்திடமிருந்து மேலும் 4 கப்பல்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன் நாட்டை வந்தடையவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



அமெரிக்க லொத்தர் இலவச விசா

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

V2 Travels

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 12 ½ பரப்புக் காணி விற்பனைக்கு**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும். 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 ½ KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
- ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135 077 408 2649

# கெர்சன் நகரிலிருந்து உடன் வெளியேறுக!

## பொதுமக்களுக்கு ரஷ்யா உத்தரவு

மொஸ்கோ, ஒக். 27

உக்ரைனிடம் இருந்து ரஷ்யா ஆக்கிரமித்துள்ள கெர்சன் நகரிலிருந்து பொதுமக்களை உடன் வெளியேற வேண்டுமென்று ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

உக்ரைனிடம் இருந்து கடந்த 6 மாத இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய 4 பிராந்தியங்களை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது. இந்த 4 பிராந்தியங்களையும் ரஷ்யா விடமிருந்து மீட்டெடுக்க உக்ரைன் இராணுவம் கடுமையாக போராடி வரும் நிலையில், அந்த 4 பிராந்தியங்களிலும் ரஷ்ய ஜனாதிபதி புடின் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், ரஷ்யா ஆக்கிரமித்த கெர்சன் நகரில் இருந்து பொதுமக்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென ரஷ்ய அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். கெர்சன் நகரின் மீது உக்ரைன் இராணுவம் கடுமையான தாக்குதலை நடத்த வாய்ப்புள்ளது. எனவே கெர்சன் நகர மக்கள் நெய்பர் ஆற்றின் வழியாக படகுகள் மூலம் ரஷ்யாவின் அதிகாரபூர்வ எல்லைக்குள் வந்து சேர வேண்டுமென அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ம)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

077 986 5457

077 814 7389

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.